மூலமாகவோ இடத்தைத் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்புகின்றபோது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ராதாபுரம் தொகுதி, வள்ளியூரில் விளையாட்டரங்கம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

42—

அடிப்படை வசதிகள்

***48096 திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், ஹைவேவிஸ் பேரூராட்சிப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது, எந்த ஓர் இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகள் சுற்றுலாத் துறைமூலம் செய்யப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில், தேனி மாவட்டம், ஹைவேவிஸ் எஸ்டேட், மேகமலை பசுமையான தேயிலைத் தோட்டங்களையும், ஏலக்காய் எஸ்டேட்டுகளையும் கொண்டுள்ள பகுதி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதி சுற்றுலாத் தலமாக

அறிவிக்கப்படுமா என்று கேட்டிருந்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கருத்துருவை அனுப்பி வைக்கும்பட்சத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவதில், இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக விளங்குகிற அரசு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசாகும். 2 கோடி மக்களுக்கு விலையில்லா 20 கிலோ அரிசி, 1 கோடியே 67 இலட்சம் குடும்பங்களுக்கு விலையில்லா வேட்டி-சேலை, 1 கோடியே 60 இலட்சம் குடும்பங்களுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் ஃபேன், 90 இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு 14 வகையான இலவசப் பொருட்கள். இப்படி வாரி, வாரி வழங்கி, அள்ளிக் கொடுக்கிற ஒரே அரசு. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

தமிழ்நாட்டில் கொடைக்கானல், ஊட்டிக்கு இணையாக சுற்றுலாத் தலமாக விளங்குகிற இடம் ஹைவேவிஸ் எஸ்டேட் பகுதி. அந்த ஹைவேவிஸ் எஸ்டேட் பகுதிக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தற்போது புதிய, அழகான தார்ச்சாலை அமைக்க 81 கோடி ரூபாய் நிதியொதுக்கியுள்ளார்கள். அந்த வேலைகள் நடைபெற்று வருகின்ற வேளையில், அந்த ஹைவேவிஸ் எஸ்டேட் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து சிறப்புச் செய்தால் நலமாக இருக்குமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கருத்துரு பெற்றவுடன், மாண்புமிகு அம்மா அவர்களின்

ஆலோசனையைப் பெற்று ஹைவேவிஸ் எஸ்டேட் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலகம்

***37428—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யத்தில் ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூறாண்டுக் காலம் கண்டிராத மழை வெள்ளத்தை தன்னுடைய கருணை மழையால் வென்று காட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய புனித அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) நூறாண்டுக் காலம் தொடர வேண்டுமென்று மேற்கொண்டிருக்கின்ற பிரார்த்தனையை எடுத்து வைக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யத்தில் ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.